1972 மார்ச் 27]

Licences to Associations of Cycle Rickshaws.

* 736. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Associations of Cycle Rickshaws have been issued licences to operate their vehicles in Madras City in 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) பேரவை முன்விவர அறிக்கையொன்று * வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இப்போது இருக்கின்ற ஏற்பாட்டின்படி, சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்களைப் பயன்படுத்தி, தனிப்பட்டவர்கள் ஆதாயம் அடைந்து வருகிறுர்கள். ஆகவே, ரிக்ஷாத் தொழிலாளர்களே முழுப் பயனையும் அடையும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சைக்கிள் ரிக்ஷாத் தொழிலாளர்களுக்குத்தான் முன் உரிமை தரப் படுகிறது. தொழிலாளர்களை பயன்படுத்தி, முதலாளிகள் பயனடை கிறுர்கள் என்ருல் தொழிலாளர்கள்தான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், ஆண்டுதோறும் சைக்கிள் ரிக்ஷா குறிப்பிட்ட விகிதாசாரத்தில் அளிக்கப்படவேண்டுமென்ற விதி இருக்கிறதா? அப்படி விதி இருக்கிறது என்பது ரிக்ஷாத் தொழிலாளர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சென்னை போன்ற பெரிய நகரங்களில் சைக்கிள் ரிக்ஷா போன்ற வாகனங்கள் அதிகமாக இருக்கக்கூடாது என்று அரசின் கொள்கை இருந்தாலும், சிற்சில நெரிசலானப் பகுதிகளில் சைக்கிள் ரிக்ஷா மூலம் விரைவாகச் செல்ல முடியும் என்பதை உத்தேசித்து, இன்றைக்கு 250 சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குவதென்றும், அதற்கு மேலும் கோரிக்கைகள் வந்தால் அதை 500 ஆக உயர்த்தலாம் என்றும் முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்ததன்பேரில், 250 சைக்கிள் ரிக்ஷாக் களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

---

* 248–250-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.